## பஹல்காமில் தீவிரவாதத் தாக்குதல்!

# உளவுத் தகவல்கள் சரிவர திரட்டப்படாதது முக்கிய காரணம்!

## தேசிய புலனாய்வு முகமை தகவல்!

புதுடெல்லி, ஜூன் 23 -

ஜம்முகாஷ்மீரின் பஹல்காமில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலுக்கு உளவுத் தகவல்கள் சரிவர திரட்டப்படாதது முக்கிய காரணம் என தேசிய புலனாய்வு முகமை தாக்கல் செய்துள்ள குற்றப் பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு ஏப்ரலில் ஜம்முகாஷ்மீரின் பாரமுல்லா மாவட்டத்தில் உள்ள பஹல்காம் பகுதியில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 26 பேர் உயிரிழந்தனர். அவர்களில் பெரும்பாலானோர் சுற்றுலாப் பயணிகள். இந்தத் தாக்குதலின் பின்னணியில் பாகிஸ்தான் இருப்பதாக குற்றஞ்சாட்டிய இந்தியா, அந்நாட்டுடன் ஆபரேஷன் சிந்தூர் என்ற பெயரில் ராணுவ மோதலில் ஈடுபட்டது.

இந்நிலையில் பஹல்காம் தாக்குதல் குறித்து விசாரணை நடத்திய என்ஐஏ, ஜம்முவில் உள்ள சிறப்பு நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளது. அதில், ட்ரோன்கள் மூலம் ஆயுதங்கள் மற்றும் வெடிபொருள்களை கடத்தி வருவதற்கு பாரமுல்லா மாவட்டத்தில் உள்ள கோகல்டரா காடுகளை தீவிரவாதிகள் பயன்படுத்தியதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

காஷ்மீர் பள்ளத்தாக்கு முழுவதும்தீவிரவாதிகளின் சுதந்திரமான நடமாட்டத்தை கண்டுபிடிக்க முடியாமல் போனதற்கு 2022 முதல் 2024ஆம் ஆண்டு வரை, உளவுத் தகவல்கள் சரிவர திரட்டப்படாததே முக்கிய காரணம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மக்களவை தொகுதிகளை மறுசீரமைப்பு செய்ய ஒன்றிய அரசு திட்டம்!

# தென் மாநிலங்களின் நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் குறையும் அபாயம்!

புதுடெல்லி, ஜூன் 23 -

1971 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையிலேயே மக்களவை தொகுதிகளை மறுசீரமைப்பு செய்ய ஒன்றிய அரசு திட்டமிட்டுள்ளது. தொகுதிகளின் எண்ணிக்கை 50 சதவீதம் உயர்த்தப்படுவதால், தென்மாநிலங்களின் நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் குறையும் அபாயம் ஏற்பட்டுள்ளது. மழைக்கால கூட்டத் தொடரில் இதற்கான சட்டத்திருத்த மசோதா தாக்கல் செய்யப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

புதிய பெண்கள் இடஒதுக்கீடு மசோதா கடந்த எப்ரல் மாதம் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. அனைத்து எதிர்கட்சிகளும் அதனை எதிர்த்ததால் மசோதா தோல்வி அடைந்தது. இதனைத் தொடர்ந்து புதிய திருத்தத்துடன் மீண்டும் மசோதாவை தாக்கல் செய்ய ஒன்றிய அரசு திட்டமிட்டுள்ளது. 133 வது அரசியல் சாசன சட்டத் திருத்த மசோதாவாக இது கொண்டுவரப்பட உள்ளது. 1971 ஆம் ஆண்டு விகிதாச்சா ரப்படி தொகுதிகளின் எண்ணிக்கை 25 ஆண்டுகள் நீடிக்க வேண்டும் என 2021 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட சட்டம் இந்த ஆண்டுடன் காலாவதி ஆகிறது. எனவே, புதிய மசோதா தாக்கல் செய்ய வேண்டிய கட்டாயத்தில் ஒன்றிய அரசு உள்ளது.

1971 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையிலேயே மக்களவை தொகுதிகளை மறுசீரமைப்பு செய்ய ஒன்றிய அரசு திட்டமிட்டு ள்ளது. மாநிலங்களுக்கான மக்களவை தொகுதிகளின் எண்ணிக்கையை 50 சதவீதம் அதிகரிக்கும் வகையில் புதிய மசோதா கொண்டுவரப்பட உள்ளது. அதே நேரத்தில் மக்களவை தொகுதிகளை, 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்குப்படி மறுசீரமைப்பு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

பட்டியல் பிரிவினருக்கான தொகுதிகளை 84 லிருந்து 136 ஆகவும், மலைவாழ் மக்களுக்கான தொகுதிகளை 47 லிருந்து 70 ஆகவும் உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான 7 அரசியல் சட்டத் திருத்தங்களுடன் இந்த மசோதா தாக்கல் செய்யப்பட உள்ளது. பெண்களுக்கான 33 சதவீதம் இடஒதுக்கீட்டை பொறுத்தவரை தொகுதி மறுவறையரை ஆணையம் அமைக்கப்பட்டு 2011 மக்கள் தொகை கணக்குப்படி தொகுதிகளை முடிவு செய்யும் வகையில் மசோதாவை தாக்கல் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. ஜூலை மூன்றாம் வாரத்தில் கூட உள்ள மழைக்கால கூட்டத்தொடரில் மசோதாவை தாக்கல் செய்ய தீவிர நடவடிக்கைகள் நடைபெற்று வருவதாக ஒன்றிய அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## கடலூர் மேற்கு மாவட்ட வர்த்தகர் அணி துணை அமைப்பாளர்

# சேப்பாக்கம் அ. தனசேகரன் இல்லத் திருமண விழா!

## மாவட்டச் செயலாளர் சி.வெ.கணேசன் எம்.எல்.ஏ., நடத்தி வைக்கிறார்! கழக நிர்வாகிகள் பங்கேற்பு!



கடலூர், ஜூன் 23 -

தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நல் ஆசியுடன் கழகத் தலைவர் முன்னாள் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் கழக இளைஞரணி செயலாளர் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் வாழ்த்துக்களுடன் கடலூர் மாவட்டம் புவனகிரி வட்டம் சேத்தியாத்தோப்பு பெரிய குப்பம் கிராமம் வி. பழனிவேல் - பி. மலர்கொடி ஆகியோரின் மகன் பொறியாளர் பி.பிரேம்குமாருக்கும் கடலூர் மாவட்டம் வேப்பூர் வட்டம் சேப்பாக்கம் கிராமம் கடலூர் மேற்கு மாவட்ட வர்த்தகர் அணி துணை அமைப்பாளர் முன்னாள் கவுன்சிலர் அ.தனசேகரன் - பழனியம்மாள் ஆகியோரின் மகள் பொறியா ளர் த. அபிநயாவுக்கும் திருமணம் நாளை (24.06.2026 புதன்கிழமை) காலை 9:30 மணிக்கு மேல் வேப்பூர் கூட்டு ரோட்டில் உள்ள "லேனா திருமண மண்டபத்தில்" நடைபெறுகிறது.

இத்திருமணத்தை கடலூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் முன்னாள் அமைச்சர் திட்டக்குடி சட்டமன்ற உறுப்பினர் சி.வெ.கணேசன் தலைமை ஏற்று நடத்திவைத்து மணமக்களை வாழ்த்துகின்றார்.

கடலூர் மேற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் சி.வெ.க. வெங்கடேசன் வரவேற்புரை ஆற்றுகிறார்.

தேசிய முற்போக்கு திராவிட கழக தலைவர் விருத்தாசலம் சட்டமன்ற உறுப்பினர் திருமதி. பிரேமலதா விஜயகாந்த், கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர் ரிஷி வந்தியம் சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் கார்த்திகேயன் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி நல வாரிய தலைவர் சி.வெ. இமயம் நெய்வேலி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சபா. இராசேந்திரன் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்கின்றனர்.

தலைமைச் செயற்குழு உறுப்பினர் நல்லூர் வடக்கு ஒன்றிய செயலாளர் பாவாடை கோவிந்தசாமி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வி.டி. கலைச்செல்வன் விருத்தாசலம் நகர செயலாளர் தண்டபாணி முன்னாள் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் துரை. கருப்புசாமி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன் விருத்தாசலம் நகர மன்ற தலைவர் டாக்டர். சங்கவி முருகதாஸ் கடலூர் மேற்கு மாவட்ட ஆதிதிராவிட நலக் குழு அமைப்பாளர் எஸ். இராமு பேராசிரியர் தமிழ் இனியன் விருத்தாசலம் தெற்கு ஒன்றிய செயலாளர் தி. வேல்முருகன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சிவக்கொழுந்து பொதுக்குழு உறுப்பினர் அரங்க. பாலகிருஷ்ணன் வி.சி.க. கிட்டு கடலூர் மேற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் எம்.எஸ். கணேஷ்குமார் விருத்தா சலம் வடக்கு ஒன்றிய செயலாளர் கனக. கோவிந்தசாமி ஒன்றிய கழகத் துணைச் செயலாளர் தர்ம. மணிவேல் டாக்டர் ஜி. செல்வகுமார் நல்லூர் வடக்கு ஒன்றிய துணை செயலாளர் பூலாம்பாடி டி. அண்ணாதுரை பொதுக்குழு உறுப்பினர் செந்தமிழ் செல்வி கருப்புசாமி முருகன் ஆடியபாதம் சிங்காரவேல் டாக்டர் ஆர்.கே. சுரேஷ் வி.சி.க. மாவட்ட செயலாளர் வீர. திராவிட மணி ஒன்றிய துணை செயலாளர் மாரிமுத்தாள் குணா சாண்டில்யன் கனக. அம்பேத் ஆர்.மதியழகன் பி.ஆர். நீதிவள்ளல் கெங்கா முத்துவளவன் தே.மு.தி.க சேகர் ஆகியோர் முன்னிலை வைக்கின்றனர்.

சிவ தியாகராஜன் எம். அகர்சந்த் டாக்டர்.கோ. நந்தகோபாலகிருஷ்ணன் ஜி. தண்டபாணி ஆனந்தி சரவணன் வி.கே. வெங்கட்ராமன் ஆர்.எஸ்.எம். தணிகை செல்வம் பி. குணா அடரி. சின்னசாமி பட்டூர். அமிர்திலிங்கம் பா. செங்குட்டுவன் குருசரஸ்வதி ப. சுரேஷ் கே.என். டி சுகுணாசங்கர் வி.பி. பி.பரமகுரு எம்.குமரவேல் டி.கண்ணன் தண்டபாணி செம்பியன் கே. கருணாநிதி டாக்டர்.எஸ் செல்லையா கோனூர் மதியழகன் எஸ். சுரேஷ்குமார் ராமானுஜம் பெரிய செந்தில்குமார் அமிர்தலிங்கம் இளையராஜா ராதா ஆட்டோ பாண்டியன் தண்டபாணி ஜி. வெங்கடாஜலபதி பட்டி சு. வசந்தகுமார் ஆர்.கே. ரவிச்சந்திரன் தங்கராசு ஆசிரியர் ஜி. இளையபெருமாள் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் பி.துரைராஜ் எஸ்.ராஜேஷ் டி. நாராயணசாமி சதாம் பாரதிராஜா மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர்கள் டாக்டர். செந்தில் ராம்குமார் கோ. வேலு லோகநாதன் மெடிக்கல் சிவா சு.வெங்கடேசன் ராஜசேகர் மாவட்ட சார்பு அணி துணை அமைப்பாளர்கள் கே.ரகுநாதன் ஏ. கருணாநிதி எம். கே.அருள்குமார் ஜி.எஸ்.ஆனந்த் கே. சேகர் இந்துமதி ராஜேஸ்வரி பொன். சிவக்குமார் டி. ஜெயபால் ஏ. சந்திரன் ஞானசௌந்தரி சசிகுமார் ராஜீவ் காந்தி நல்லூர் வடக்கு ஒன்றிய நிர்வாகிகள் பால் கருப்பையா பொன். அண்ணாதுரை ஏ. அன்புகுமரன் சி.சக்திவிநாயகம் ஜே.பாபு சேகர் ஜி. வெங்கடாசலம் ராஜலட்சுமி கணேசன், சோலைராஜன் வி.தனசேகர் வி. குணசேகரன் டி. ராஜா எம். ராஜா எம்.சூர்யா இராஜவேல் ஏ. செந்தில்குமார் ஆர்.மாரிமுத்து ஜெயராமன் யுவராஜ் கதிர்வேல் மனோகரன் அழகுவேல்சன். அன்பழகன் பி. பாண்டுரங்கன் பிரதீப்சிங் தமிழ்செல்வன் மற்றும் மாவட்ட கழக நிர்வாகிகள் கழக சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர் சேப்பாக்கம் பி. தங்கவேல் டாக்டர் டி.தன்சூர்யா டி.ஆர்த்தி ஆகியோர் நன்றி உரை ஆற்றுகின்றனர்.

## பி.எம்.ஸ்ரீ. திட்டம் மூலம் இந்தியைத் திணிக்கும் ஒன்றிய பா.ஜ.க.அரசைக் கண்டித்தும் –

## நான் முதல்வன் திட்டப் பெயரை மாற்றிய த.வெ.க.அரசைக் கண்டித்தும்

# தி.மு.க. மாணவரணி இன்று நடத்தும் மாபெரும் ஆர்ப்பாட்டத்தில் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட மாணவரணியினர் திரளாகப் பங்கேற்பீர்!

## மாவட்டச் செயலாளர் க.சுந்தர் வேண்டுகோள்!



காஞ்சிபுரம், ஜூன் 23-

மும்மொழிக் கொள்கை என்ற பெயரில் இந்தியைத் திணிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்தும், நான் முதல்வன் திட்டத்தின் பெயரினை மாற்றிய த.வெ.க. அரசைக் கண்டித்தும் தி.மு.க. மாணவரணி சார்பில் இன்று (23.6.2026) நடைபெறும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழக மாணவரணியினர் பெருந்திரளாக கலந்து கொள்ள வேண்டுமாய் மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

இது குறித்து மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் விடுத்துள்ள வேண்டுகோள் அறிக்கை வருமாறு:

தமிழ்நாட்டில் பி.எம். ஸ்ரீ. திட்டம் மூலம் இந்தியைத் திணிக்க ஒன்றிய பா.ஜ.க.அரசு முயற்சித்து வருகிறது.

சி.பி.எஸ்.சி. பள்ளிகளில் இந்தியைத் திணிக்கும் வகையில் மும்மொழிக் கொள்கையை திணிக்க நடவடிக்கையை ஒன்றிய பா.ஜ.க. அரசு எடுத்து வருகிறது. சி.பி.எஸ்.சி. பள்ளிகளில் 9-ஆம் வகுப்பில் மும்மொழிக் கொள்கையை திணிக்க ஒன்றிய பா.ஜ.க.அரசு தீர்மானித்து அதன் முதற்கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தொடங்கி விட்டது. இதற்கு த.வெ.க. மௌனஅரசு வாய்திறக்கவில்லை. மேலும் நீட் வினாத்தாள் கசிவு, தமிழகத்திற்கான ஒன்றிய அரசின் கல்வி நிதி நிலுவை,

அது மட்டுமல்லாமல் திராவிட மாடல் ஆட்சியில் மாணவர்களின் கனவு, இளைஞர்களின் கனவுகளை நிறைவேற்றிய திட்டம் தான் நான் முதல்வன் திட்டம், இத்திட்டத்திற்கு தற்போதைய த.வெ.க. அரசு "திறன் தமிழ்நாடு" (கூசூ ளுமடைட) என்று பெயர் மாற்றம் செய்துள்ளது. ஏழை மாணவர்களின் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். கனவை நனவாக்கும் கழகத் தலைவரின் உண்ணதமான திட்டங்களில் இத்திட்டமும் ஒன்றாகும்.

இத்திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டில் ஏழை எளிய மாணவர்கள் ஐ.ஏ.எஸ். ஐ.பி.எஸ். என்று உயர் பதவியில் அமர்ந்த வரலாறுகள் தமிழகத்தில் உண்டு. அப்பெருமை எல்லாம் கடந்த கால திராவிட மாடல் ஆட்சி குறிப்பாக முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்கு சென்று விடுமோ என்று அஞ்சிய மௌவுன முதல்வர் இத்திட்டத்திற்கு எடுத்தேன் கவிழ்த்தேன் என்கிற வகையில் இப்பெயரை மாற்றம் செய்துள்ளார்.

இதனையும் கண்டிக்கும் வகையிலும் இம் மும்மொழிக் கொள்கையை திணிப்பதை உடனடியாக கைவிட வலியுறுத்திடவும் கழகத்தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் உத்தரவின் படியும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின் படியும்

தி.மு.க. மாணவர் அணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்துவது என்று சென்னை அண்ணா அறிவாலயத்தில் மாணவரணிச் செயலாளர் வீரமணி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின் படி இன்று (23.6.2026) காலை 9 மணிக்கு சென்னை சைதாப்பேட்டை, கைஞர் பொன் விழா வளைவு அருகில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது.

இந்த மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் நமது காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் இருந்து மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பேரூர், வார்டு கிளைக் கழகங்களைச் சேர்ந்த மாணவரணி நிர்வாகிகள், மாணவரணியினர், கல்லூரி மாணவர்கள் என்று நமது மாவட்டத்திற்கு மாணவரணியினால் பெருமை கிடைத்திடும் வகையில் ஆயிரக் கணத்தில் பெருந்திரளாக மாணவர்கள் கலந்து கொண்டு இம் மாபெரும் மாணவரணி ஆர்ப்பாட்டத்தை வெற்றியடையச் செய்ய வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

# திருவள்ளூர் மாவட்டத்தில் அறிவிக்கப்படாத தொடர் மின்வெட்டு!

திருவள்ளூர், ஜூன் 23 -

திருவள்ளூர் மாவட்டத்தில் அறிவிக்கப்படாத தொடர் மின்வெட்டால் பொதுமக்கள் கடும் அவதிக்கு ஆளாகினர்.

த.வெ.க ஆட்சி பொறுப்பேற்ற நாள் முதல், மின்வெட்டு மாபெரும் பிரச்சினையாக தமிழ்நாடு முழுவதும் உருவெடுத்துள்ளது. திருவள்ளூர் மாவட்டம் கனகம்மா சத்திரம் மின்வாரிய எல்லைக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் அடிக்கடி தொடர் மின்வெட்டு ஏற்படுவதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இந்நிலையில் திருவள்ளூர், கனகம்மாசத்திரம், முத்துகொண்டாபுரம், கூளூர், காஞ்சிபாடி, காவேரிராஜபுரம் உள்ளிட்ட 200க்கும் மேற்பட்ட ஊராட்சி, நகராட்சி வார்டுகளில் மாலை 4 மணி முதல் தொடர் மின்தடை நீடித்தது.

அறிவிக்கப்படாத மின்வெட்டு பலமணி நேரமாக நீடித்ததால் முதியோர், குழந்தைகள், கர்ப்பிணிகள் கடும் சிரமத்திற்கு ஆளாகினர். மின்வெட்டை சீரமைக்க த.வெ.க அரசு எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை என பொதுமக்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

## திருப்பூர் பெருச்சிபாளையம் அரசு துவக்க மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில்

# அமைச்சர் ஆய்வில் அவசர சிகிச்சை பிரிவிலும் ரீல்ஸ் மோகம்!

## மருத்துவர்களுக்குத் தடை – த.வெ.க. ஐ.டி. விங் உறுப்பினர்களுக்கு அனுமதி!

திருப்பூர், ஜூன் 23 -

திருப்பூர் பெருச்சிபாளையம் அரசு துவக்க மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அமைச்சர் ஆய்வுப்பணியில் ஈடுபட்டிருந்த போது, அவருடன் மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனை மருத்துவர்களும், உயர் அலுவலர்களும் தொடர்ந்து சென்றனர்.

அப்போது, அங்கிருந்த அமைச்சரின் ஆதரவாளர்கள் திடீரென மருத்துவக் கல்லூரில் ஆர்.எம்.ஓ. உள்ளிட்ட மருத்துவர்களையும், அலுவலர்களையும் உள்ளே செல்ல விடாமல் தடுத்து நிறுத்தினர்.

அதே வேளையில், கைகளில் செல்போன்களுடன் வந்திருந்த த.வெ.க. கட்சி ஐ.டி. விங் நிர்வாகிகளை அமைச்சரின் ஆதரவாளர்கள் எவ்வித தடையுமின்றி உள்ளே அனுமதித்தனர்.

இதேபோல் அவசர சிகிச்சை பிரிவில் அமைச்சருடன் மருத்துவர்கள் அலுவலர்களை காட்டிலும் அவரது ஆதரவாளர்களும், த.வெ.க. ஐ.டி.விங் எனக் கூறிக்கொண்டு மொபைல் போனுடன் அதிகம் பேர் சென்றனர்.

மருத்துவர்களுக்கும், சிகிச்சை அளிப்பவர்களுக்கும் இடையூறு ஏற்படுத்தும் வகையில் அமைச்சர் ஆய்வை ஒவ்வொரு பக்கத்தில் இருந்து வெவ்வேறு கோணங்களில் வீடியோ எடுத்தபடியே சென்றனர்.

இதனால் மருத்துவர்கள் பெரும் சிரமத்திற்குள்ளாகினர்.

## மேலும் ஒரு டிரான்ஸ்பார்மர் வெடித்துச் சிதறியது

# முதல்வர் தொகுதியில் விடிய விடிய மின்தடையால் பொதுமக்கள் தவிப்பு!

## தெருக்களில் இரவை கழித்த அவலம்!

சென்னை, ஜூன் 23 -

முதல்வர் தொகுதியில் மேலும் ஒரு டிரான்ஸ்பார்மர் வெடித்து சிதறியது. இதன் காரணமாக, விடிய விடிய மின்சாரம் இல்லாமல் பொதுமக்கள் பெரும் தவிப்புக்கு உள்ளார்கள். தமிழகத்தில் மின்வெட்டு பிரச்னை தொடர்ந்து அதிகரித்து வருவதால் பொதுமக்கள் கடும் அவதிக்குள்ளாகி வருகின்றனர். அதிலும் தலைநகர் சென்னையில் இரவு நேரங்களில் அடிக்கடி ஏற்படும் மின்வெட்டால் பொதுமக்கள் கடும் அவதி அடைந்து வருகின்றனர்.

குறிப்பாக தமிழக முதல்வரின் சொந்த தகுதியான பெரம்பூர் சட்டமன்ற தொகுதியில் கடந்த 20 நாட்களாகவே மின்வெட்டு பிரச்னை பொதுமக்களை ஆட்டிப்படைத்து வருகிறது. நள்ளிரவு நேரங்களில் பொதுமக்கள் சாலை மறியலில் ஈடுபட்டு தங்களது பிரச்னைகளுக்கு தீர்வு கண்டு வருகின்றனர். அந்த வகையில், கடந்த சில நாட்களுக்கு முன்பு வரை வியாசர்பாடி சர்மா நகர், முல்லை நகர், கண்ணதாசன் நகர், கொடுங்கையூர் முத்தமிழ் நகர் உள்ளிட்ட இடங்களில் மின்வெட்டு பிரச்னை அவ்வப்போது ஏற்பட்டு வந்தது.

பொதுமக்களின் தொடர் போராட்டங்கள் காரணமாக அப்பகுதிகளில் ஓரளவிற்கு நிலைமை தற்போது சீர் செய்யப்பட்டுள்ளது. இருப்பினும் இரவு நேரங்களில் சில இடங்களில் தொடர்ந்து மின்வெட்டு பிரச்னை இருந்து வருகிறது. இந்நிலையில் கடந்த சில தினங்களுக்கு முன்பு எம்கேபி நகர் பகுதியில் டிரான்ஸ்பார்மர் வெடித்து சிதறி இரவு முழுவதும் பொதுமக்கள் மின்சாரம் இல்லாமல் தவித்தனர். அப்பகுதியில் உள்ள இரண்டு தனியார் பள்ளிகளுக்கு விடுமுறையும் விடப்பட்டது.

இந்த பிரச்னை தற்போது சரி செய்யப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் இரவு 11.40 மணியளவில் பெரம்பூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட கந்தன் தெருவில் உள்ள டிரான்ஸ்பார்மர் உயர் மின்னழுத்தம் காரணமாக வெடித்து சிதறி தீப்பற்றி எரிந்தது. சிறிது நேரத்தில் தீ அதிகமாக பரவி கொழுந்து விட்டு எரிய தொடங்கியதால் அக்கம் பக்கத்தினர் இதுகுறித்து செம்பியம் போலீசாருக்கும், செம்பியம் தீயணைப்பு நிலையத்திற்கும் தகவல் தெரிவித்தனர்.

செம்பியம் தீயணைப்பு நிலைய வீரர்கள் சம்பவ இடத்திற்கு வந்து தீயை அணைத்தனர். சுமார் 20 நிமிடங்கள் போராடி தீ கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. இதனால் இரவு 12 மணி முதல் காலை நான்கு முப்பது மணி வரை கந்தன் தெரு, துளசிங்கம் தெரு, முரனியப்ப தெரு, நட்டால் கார்டன் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் மின்சாரம் இல்லாமல் பொதுமக்கள் கடும் அவதி அடைந்தனர்.

தற்போது கோடை வெயில் அதிகரித்து உள்ள நிலையில் மின்சாதன பொருட்களை பயன்படுத்த முடியாமல் பெரும்பாலான மக்கள் தெருக்களில் தங்களது இரவை கழித்தனர். மின்வாரிய ஊழியர்கள் நேற்று காலை முதல் டிரான்ஸ்பார்மரை சரி செய்யும் பணியில் ஈடுபட்டனர்.




நாமக்கல் மேற்கு மாவட்ட மாணவர் அணி சார்பில் நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. பொறுப்பாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ்.மூர்த்தி தலைமையில், ஆலோசனைக் கூட்டம் திருச்செங்கோட்டில் உள்ள மாவட்டக் கழக அலுவலகமான தளபதி அரங்கில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாநில மாணவர் அணி துணைச் செயலாளர் சுரேஷ் குமார், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் பாலசுப்பிரமணியம், நாமக்கல் மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட அனைத்து ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், மாவட்ட நிர்வாகிகள், மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் மாணவர் அணி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.